Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, ஜனவரி 09 2024 | இதழ் 177

# 3-வது கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வி. திட்டமிட்டபடி வேலை நிறுத்தம்: பஸ் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு, பஸ்கள் இயங்கும்: அமைச்சர் சிவசங்கர் பேட்டி



சென்னை, 09 ஜனவரி 2024: திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் நடைபெறும் என்று போக்குவரத்து சங்கங்கள் அறிவித்துள்ள நிலையில் நாளை முழுமையாக பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:

டிஎம்எஸ் வளாகத்தில் போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை குறித்து முத்தரப்பு பேச்சுவாரத்தை நடைபெற்றது. தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர் ரமேஷ் தலைமையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. முத்தரப்பு பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது. அதே சமயம், தொமுச உள்ளிட்ட சில சங்கங்கள் மூலம் நாளை முழுமையாக பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் இரண்டு கோரிக்கைகளை தற்போது ஏற்பதாக போக்குவரத்து துறை தெரிவித்து உள்ள நிலையில், பொங்கலுக்கு பின் இதுகுறித்து முடிவு எடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை குறித்து நடந்த 3 வது முத்தரப்பு பேச்சுவாரத்தையும் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து நாளை திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் நடைபெறும் என்று போக்குவரத்து தொழிற் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

நாளை பஸ்கள் இயங்கும் என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பதினைந்தாவது ஊதிய ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், போக்குவரத்து துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற 92 ஆயிரம் ஓய்வூதியர்களுக்கு நிலுவையில் உள்ள 96 மாத டி.ஏ.படி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி சிஐடியு, ஏஐடியுசி, அண்ணா தொழிற்சங்க பேரவை, ஐஎன்டியுசி, டிடிஎஸ்எஃப், பிஎம்எஸ் உள்ளிட்ட சங்கங்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கியிருந்தன.

இதுதொடர்பான 2-ம் கட்ட சமரச பேச்சுவார்த்தை, சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலகத்தில் கடந்த 3 ந் தேதி நடைபெற்றது. இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து, 9 ந் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அரசு போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்கள் அறிவித்தன.

அதே சமயம், போக்குவரத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் நடந்தாலும் பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். மேலும், போக்குவரத்து ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து போக்குவரத்துறை அமைச்சர் சிவசங்கர் நிதித்துறை செயலாளர் உடன் ஆலோசனை நடத்தினார். 45 நிமிடங்கள் நிதித்துறை செயலாளருடன் ஆலோசனை நடத்தியதையடுத்து, போக்குவரத்து துறை ஆணையர் சண்முக சுந்தரம் ஐ.ஏ.எஸ். உடன் அமைச்சர் சிவசங்கர் ஆலோசனை மேற்கொண்டார்.

ஏற்கனவே நடைபெற்ற இரண்டு கட்ட பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், தற்போது 3வது முறையாக இன்று டிஎம்எஸ் வளாகத்தில் போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை குறித்து முத்தரப்பு பேச்சுவாரத்தை நடைபெற்றது. தொழிலாளர் நலத்துறை இணை இயக்குனர் ரமேஷ் தலைமையில், போக்குவரத்து தொழிற்சங்கங்கள் மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் இளங்கோ, மாநகரப் போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆல்பி ஜான், தொழிற்சங்கங்கள் தரப்பில் சிஐடியு, ஏஐடியுசி, அண்ணா தொழிற்சங்க பேரவையை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர். இந்நிலையில், போக்குவரத்து தொழிற்சங்கத்தினருடன் நடைபெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. பேச்சுவார்த்தைதோல்வியில் முடிந்ததை அடுத்து நாளை முதல் திட்டமிட்டபடி வேலை நிறுத்த பேராட்டம் நடைபெறும் என தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சிஐடியூ தொழிற்சங்க தலைவர் சௌந்தரராஜன் கூறியதாவது:

6 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி நடந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையில், எதையும் இப்போது ஏற்க இயலாது. பொங்கலுக்கு பிறகு பேசிக்கொள்ளலாம் என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டது. முழுக்க முழுக்க நியாயமற்ற பதில் இது. அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாத பதில் இது. ஊழியர்களின் கோரிக்கைகள் எதன் மீதும் இப்போது முடிவு சொல்ல முடியாது என்று அரசு தரப்பும், அமைச்சரும் சொன்னார்கள். அதனை நாங்கள் ஏற்க மறுத்துவிட்டோம்.

இந்த அரசு போக்குவரத்து தொழிலாளர்களை இரண்டாம் தர குடிமக்களாக பார்க்கிறது. தமிழகத்தில் இருக்கிற எந்த துறையிலும், எந்த பொதுத்துறை தொழிலாளிக்கும் இழைக்கப்படாத அநீதியை போக்குவரத்து தொழிலாளிகளுக்கு இந்த அரசு இழைத்துக்கொண்டே இருக்கிறது. பஞ்சபடியை பொறுத்தவரை எங்களுக்கு அதிகரித்து தர வேண்டும் என்று கேட்கவில்லை, எங்களுக்கு தரவேண்டிய பாக்கியை தான் கேட்கிறோம். எங்களுக்கு அரசு தரவேண்டிய கடன். மற்ற கோரிக்கைகள் எல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம், பஞ்ச படி பாக்கியை மட்டும் கொடுக்க வேண்டும் என்பதையே இன்றைய பேச்சுவார்த்தையில் வலியுறுத்தினோம். இதையும் பொங்கலுக்குப் பிறகு பேசிக்கொள்ளலாம் என்றார்கள்.

எதுவும் செய்ய முடியாது என முடிவெடுத்து மிகப்பெரிய தவறை அரசு இழைக்கிறது. எனவே, வேலைநிறுத்தத்தை திரும்ப பெற முடியாது. திட்டமிட்டபடி வேலைநிறுத்தம் நடைபெறும் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். 100 சதவீத பேருந்துகள் இயங்காது. எங்கள் நிலையை புரிந்துகொண்டு மக்கள் எங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். ஆறு கோரிக்கையில் இருந்து ஒரு கோரிக்கைக்கு வந்தபின்னும்கூட அரசு அதிகாரிகள் ஏற்க மறுத்துவிட்டனர். இன்று மாலை வரை நேரம் இருக்கிறது. அமைச்சர் எங்களை அழைத்து பேச தயாராக இருந்தால் நாங்களும் தயார். வேலைநிறுத்தம் என்ற தவிர்க்க முடியாத சூழலுக்கு எங்களை அரசு தள்ளியுள்ளது.

இன்று நள்ளிரவு 12 மணி முதல் வேலைநிறுத்தம் தொடரும். எங்களது கோரிக்கை எதையும் ஏற்காமல் வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள் என்று சொல்ல அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# 17-ந் தேதி அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு
# சிறந்த காளை, மாடுபிடி வீரருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் சார்பில் கார் பரிசு

சென்னை, 09 ஜனவரி 2024: தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா வருகிற 17-ந்தேதி அரசு வழிகாட்டுதல்படி நடைபெற உள்ளது. இதையொட்டி அங்குள்ள வாடிவாசல் அருகே உள்ள முத்தாலம்மன் கோவில் முன்பாக முகூர்த்தகால் நடும் நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட கலெக்டர் சங்கீதா, வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் அரசு அலுவலர்கள், விழா குழுவினர், கிராம பொதுமக்கள் முன்னிலையில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்து கால்கோள் நடும் நிகழ்வு நடந்தது.

இதைத் தொடர்ந்து அமைச்சர் பி.மூர்த்தி நிருபர்களிடம் கூறியதாவது:-

வழக்கத்தை போலவே இந்த ஆண்டும் உலகப்புகழ் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா வருகின்ற 17-ந்தேதி அரசு வழிகாட்டுதல் படி சீரும் சிறப்புமாக நடைபெறும். சென்ற ஆண்டை போலவே இந்த ஆண்டும் ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் அனைத்து காளைகளுக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்படும். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் சிறப்பாக விளையாடி முதல் பரிசு பெறும் காளைக்கும், சிறந்த மாடுபிடி வீரருக்கும் தமிழக முதலமைச்சர் சார்பில் தலா ஒரு கார் பரிசாக வழங்கப்படும். இரண்டாம் பரிசாக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் இருசக்கர வாகனம் வழங்கப்படும்.

மேலும் மாடு பிடிக்கும் அனைத்து மாடு பிடி வீரர்களுக்கும் தங்க நாணயம் வழங்கப்படும். கன்றுடன் கூடிய நாட்டு பசு மாடு, தங்க நாணயம், கட்டில் பீரோ, உள்ளிட்ட விலை உயர்ந்த பரிசு பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள் பரிசாக வழங்கப்பட உள்ளது. அரசின் வழிகாட்டுதல்படி அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு கட்டுப்பட்டு ஜல்லிக்கட்டு விழா நடைபெறும். சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் மாடு பிடி வீரர்கள் ஆன்லைன் மூலம் பதிவு செய்து பங்கேற்கலாம். காளைகளுக்கும் தற்போது மருத்துவ பரிசோதனை தொடங்கப்பட உள்ளது. தகுதி பெறும் காளைகள் இந்த ஜல்லிக்கட்டில் பங்கேற்கலாம். ரூ.44 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு அரங்கம் இந்த மாத இறுதியில் திறக்கப்படும். தமிழக முதல்வர் திறந்து வைப்பார். இன்னும் ஓரிரு நாட்களில் அரங்கம் திறக்கப்படும் தேதி அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பேரூராட்சி செயல் அலுவலர் ஜீலான் பானு, தி.மு.க. அவைத் தலைவர் பாலசுப் பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ்,



பரந்தாமன், பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், நகர் செயலாளர் ரகுபதி, பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணை தலைவர் சுவாமிநாதன், டி.எஸ்.பி. பாலசுந்தரம், யூனியன் ஆணையாளர் பிரேமராஜன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சீர்காழியில் 24 செ.மீ. மழை பதிவு தென் மாவட்டங்களில் கனமழை நீடிக்கும்: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை 50,000 ஏக்கர் விளை நிலங்கள் பாதிப்பு

சென்னை, 09 ஜனவரி 2024: தென் மாவட்டங்களில் கனமழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வடதமிழக கடலோரப்பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, சேலம், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

நாளை தென் தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.




10 ந்தேதி தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

11 ந்தேதி முதல் 13 ந்தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் மிதமான மற்றும் கனமழை பெய்யக்கூடும்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை

இன்று முதல் 10 ந்தேதி வரை தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகள், இலங்கை கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

11 மற்றும் 12 ந்தேதிகளில் குமரிக்கடல் பகுதிகளில் மற்றும் மலாத்தீவு பகுதகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு வருமாறு:

சீர்காழி 24 செ.மீ, சிதம்பரம் 23 செ.மீ., வேளாங்கண்ணி 22 செ.மீ, திருவாரூர், நாகை தலா 21 செ.மீ, கொள்ளிடம், புவனகிரி தலா 19 செ.மீ, நன்னிலம் 17 செ.மீ, சேத்தியாதோப்பு, அண்ணாமலை நகர் தலா 15 செ.மீ, திருப்பூண்டி, கே.எம்.கோயில், காரைக்கால், கடலூர் தலா 14 செ.மீ,

கொடவாசல், மரக்காணம், கொத்தவாசேரி, புதுச்சேரி தலா 13 செ.மீ, லால்பேட், வானூர், கடலூர் கலெக்டர் அலுவலகம் தலா 12 செ.மீ, திருவிடைமருதூர், மணல்மேடு, வலங்கைமான், மயிலாடுதுறை, கும்பகோணம், பரங்கிபேட்டை, குறிஞ்சிபாடி, செய்யூர், மதுராந்தகம், புதுச்சேரி கே.வி.கே., தலைஞாயிறு தலா 10 செ.மீ,

எண்ணூர், தரங்கம்பாடி, ஸ்ரீமுஷ்ணம், ஜெயம்கொண்டம், மஞ்சளாறு, நீடமங்கலம், திருகழுக்குன்றம், விழுப்புரம், கோலியனூர், சூரப்பட்டு தலா 9 செ.மீ, வளவனூர், வானமாதேவி, பொன்னேரி, கேளம்பாக்கம், அரியலூர் தலா 8 செ.மீ, முண்டியம்பாக்கம், ஆலந்தூர், மன்னார்குடி, திருக்குவளை, தஞ்சை பாபநாசம், தரமணி, செங்கல்பட்டு, மீனம்பாக்கம், குடிதாங்கி, கத்திவாக்கம், கொளப்பாக்கம், குப்பநத்தம், செஞ்சி, செம்மேடு, உத்திரமேரூர், கேதார், முகலிவாக்கம் தலா 7 செ.மீ, விருத்தாசலம், சோழிங்கநல்லூர், பண்ருட்டி, அடையார், திருப்போரூர், உளுந்தூர்பேட்டை, பெருந்துறை, ஆவடி, வேதாரண்யம் தலா 6 செ.மீ, மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை அகற்றுவதற்கு ராகுல்காந்தியின் இந்திய ஒற்றுமை நீதி பயணம் நிச்சயம் துணை புரியும் - தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி

சென்னை, 09 ஜனவரி 2024: ராஜஸ்தான் இடைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி : அனைவருக்கும் புத்தாண்டு - பொங்கல் வாழ்த்துகள். தொடக்கத்திலேயே தற்போது கிடைத்த மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ராஜஸ்தான் மாநிலத்தில் பொதுத் தேர்தலின் போது ஒரு தொகுதியில் தேர்தல் நடைபெறவில்லை. அந்த தொகுதியின் இடைத் தேர்தலில் அமைச்சர் பொறுப்பில் இருக்கும் பா.ஜ.க. வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டு, காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றிருக்கிறார். அடுத்து ஒரு மகிழ்ச்சியான செய்தி. குஜராத் மாநிலத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தில் ஆயிரக்கணக்கான சிறுபான்மையினர் படுகொலை செய்யப்பட்டதை அனைவரும் அறிவர். அதில் நடைபெற்ற மோசமான சம்பவம் பில்கிஸ் பானுவுக்கு நடந்த கொடூரம். இது உலக நாடுகளில் உள்ள முற்போக்காளர்களை அதிர வைத்தது. 5 மாத கர்ப்பிணியான பில்கிஸ் பானு வன்முறையாளர்களால் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். பானுவின் 3 வயது பெண் குழந்தை உட்பட அவரது குடும்ப உறுப்பினர்கள் 7 பேர் அந்த கலவரத்தில் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் 11 பேர் குற்றவாளிகள் என்று தீர்ப்பு கூறப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், குஜராத் மாநில பா.ஜ.க. அரசு தண்டனை காலம் நிறைவு பெறுவதற்கு முன்பாகவே குற்றவாளிகள் 11 பேரையும் கடந்த 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி சிறையிலிருந்து தண்டனை குறைப்பு செய்வதாக கூறி விடுதலை செய்தனர். இதனை எதிர்த்து பில்கிஸ் பானு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் அவர்களை முன்கூட்டியே விடுவிக்க குஜராத் அரசுக்கு அதிகாரமில்லை என்று கூறி 11 குற்றவாளிகளின் விடுதலையை ரத்து செய்திருக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசில் நடைபெறுகிற இதுபோன்ற கொடுமைகளுக்கு நீதி கிடைக்க கடைசி புகலிடம் உச்சநீதிமன்றம் இருக்கிறது என்ற நம்பிக்கையை இந்த தீர்ப்பு நமக்கு வழங்கியிருக்கிறது.

கடந்த 2022 செப்டம்பர் 7 ஆம் தேதி கன்னியாகுமரியில் தொடங்கிய 150 நாட்களில் 4,000 கி.மீ. இந்திய ஒற்றுமை பயணம் மேற்கொண்டு ஜனவரி 30 அன்று காஷ்மீரில் தலைவர் ராகுல்காந்தி நிறைவு செய்தார். இதன்மூலம் நாட்டு மக்களிடையே மிகுந்த எழுச்சியை ஏற்படுத்தினார். பா.ஜ.க.வின் மதரீதியாக பிளவுபடுத்துகிற அரசியலை முறியடித்தார்.

தற்போது வருகிற ஜனவரி 24 ஆம் தேதி இந்திய ஒற்றுமை நீதி பயணத்தை மணிப்பூர் மாநிலம் இம்பாலில் தொடங்கி 6713 கி.மீ. தூரத்தை 66 நாட்களில் மார்ச் 20 அன்று மும்பையில் நிறைவு செய்ய இருக்கிறார். இப்பயணத்தில் 110 மாவட்டங்கள், 100 மக்களவை தொகுதிகள் மற்றும் 337 சட்டப்பேரவை தொகுதிகளை கடந்து மக்களை சந்தித்து நாட்டில் பா.ஜ.க. ஆட்சியில் நடைபெறுகிற அநீதிகளுக்கெல்லாம் நீதி கேட்டு நெடும் பயணத்தை தலைவர் ராகுல்காந்தி மேற்கொள்கிறார். ஜனவரி 14 ஆம் தேதி அன்று நடக்கிற தொடக்க நிகழ்வில் நான் பங்கேற்கிறேன். அவரது பயணம் மிகப்பெரிய வெற்றியை பெற வேண்டும். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை அகற்றுவதற்கு இப்பயணம் நிச்சயம் துணை புரியும் என்று தலைவர் ராகுல்காந்தி அவர்களை மனதார வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.



கடந்த மே 2021 தேர்தலுக்கு பிறகு, மக்கள் நலன்சார்ந்த ஆட்சி தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்தது முதற்கொண்டு, கொடுத்து வாக்குறுதிகள் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுகிற தீவிரமான செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாக மாற்றுவதற்கு உலக முதலீட்டாளர்கள் மாநாடு நேற்றும், இன்றும் நடைபெற்று வருகிறது.

முதல் நாளிலேயே ரூபாய் 5.5 லட்சம் கோடி முதலீடு பெறப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படடிருக்கின்றன. தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டிற்கும் 1 டிரில்லின் அமெரிக்க டாலர் - ஏறத்தாழ ரூபாய் 83 லட்சம் கோடி பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கடந்த மே 2021 முதல் தற்போது வரை 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூபாய் 2.70 லட்சம் கோடிக்கான முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. 4 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எரிசக்தி துறையில் ரூபாய் 1.37 லட்சம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு 18,420 மெகாவாட் மின்உற்பத்தி கூடுதலாக கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய செய்திகளின் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக கருதப்படுவதால் தொழில் முனைவோர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். இத்தகைய நிலையை அடைவதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொண்ட முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களையும், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் மனதார பாராட்டுகிறேன்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்கு உரிய வரி பங்களிப்பை வழங்கவில்லை என்பதை உறுதி செய்கிற வகையில் நாம் ஒரு ரூபாய் வரி செலுத்தினால், 29 பைசா தான் தமிழகத்திற்கு வழங்கப்படுகிறது என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கூறியிருந்தார். ஆனால், இதற்கு நேரிடையாக பதில் கூறாமல் மறைமுக வரியில் 71 சதவிகிதம் மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது. மீதம் உள்ள 29 சதவிகிதம் தான் ஒன்றிய அரசுக்கு கிடைக்கிறது என்று அண்ணாமலை பொத்தாம் பொதுவாக ஆதாரமற்ற கருத்தை கூறியிருக்கிறார். ஏற்கனவே தமிழக நிதியமைச்சர் புள்ளி விவரங்களோடு பதில் கூறிய பிறகு, இத்தகைய கருத்தை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

2015 முதல் வெள்ளம், வறட்சி, வர்தா புயல், கனமழை, ஒக்கி புயல், கஜா புயல், மீண்டும் கனமழை, வெள்ளம் என பல்வேறு இயற்கையின் சீற்றங்களால் 2022 வரை பாதிக்கப்பட்ட நிலையில் தமிழக அரசுகள் ஒன்றிய அரசிடம் நிவாரண நிதியாக கேட்டது ரூபாய் 1 லட்சத்து 27 ஆயிரத்து 655 கோடி. ஆனால், மோடி அரசு வழங்கியதோ ரூபாய் 5884 கோடி. இது கேட்ட தொகையில் வழங்கியது 4.6 சதவிகிதம் தான். இந்நிலையில், இந்தியாவிலேயே தமிழகத்திற்கு அதிக நிதி வழங்கியதாக திருச்சியில் பிரதமர் மோடி பேசியதும், அதற்கு அண்ணாமலை ஒத்து ஊதுவதையும் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தமிழகம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள். ஒவ்வொரு முறையும் பிரதமர் மோடி பேசுகிற போது. தமிழ் மொழி மீது அலாதி பற்று கொண்டிருப்பதைப் போல பாசாங்கு செய்து நாடகம் ஆடி வருகிறார். ஆனால், 2017 முதல் 2022 வரை மோடி அரசு 16,000 மக்கள் மட்டுமே பேசுகிற சமஸ்கிருத மொழியை வளர்க்கும் நோக்கத்தோடு தலைநகர் தில்லியில் செயல்படுகிற மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழகத்திற்கு வழங்கிய தொகை ரூபாய் 1074 கோடி. ஆனால், செம்மொழிகளாக ஒன்றிய அரசு ஏற்றுக் கொண்ட தமிழ், கன்னடம், ஒடியா உள்ளிட்ட மொழிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 22.94 கோடி மட்டும் தான். இத்தகைய பாரபட்சத்தை செய்து வருகிற பிரதமர் மோடி தமிழ் மொழி மீது மிகுந்த அக்கறை கொண்டவராக பேசி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.

மதுரை அலங்காநல்லூரில் தமிழக பொதுப்பணித்துறை ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக பிரம்மாண்டமான மைதானத்தில் அரங்கு அமைத்திருப்பதை வரவேற்கிறேன். இது அலங்காநல்லூரில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் 66 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 61 கோடி செலவில் 5 ஆயிரம் மக்கள் அமர்ந்து பார்க்கிற வகையில் அரங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இதை தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மதுரையிலிருந்து வெகு தூரத்தில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், மக்களோடு தொடர்பில்லாத இடத்தில் இருப்பதாகவும் கூறியிருக்கிறார். தமிழக அரசின் ஜல்லிகட்டு மைதானம் மதுரையிலிருந்து 25 கி.மீ. தூரத்திலும், ஜல்லிக்கட்டுக்கு புகழ்பெற்ற அலங்கநல்லூரிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கிறது. அனைத்து வசதிகளுடன் ஜல்லிக்கட்டு மைதானம் அமைய வேண்டுமென்றுச் சொன்னால் அதற்கு விசாலமான இடம் தேவைப்படுகிறது. அப்படித் தான் இந்த இடத்தை பொதுப்பணித்துறை தேர்வு செய்து அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக தமிழக முதலமைச்சரையும், பொதுப்பணித்துறை அமைச்சரையும் பாராட்;டுவதற்கு மனமில்லாத அண்ணாமலை இட்டுக்கட்டி பேசுவது மிகுந்த கண்டனத்திற்குரியது. பேருந்து ஊழியர்கள் கோரிக்கை சம்மந்தமாக தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சு வார்த்தை தோல்வியடைந்தது மிகுந்த வருத்தத்தை தருகிறது. தற்போது தொழிற்சங்கங்கள் அறிவிப்பின்படி, போக்குவரத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதனால் பெரும்பாலான பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தினால் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியூர் செல்கிற பயணிகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுகிற நிலை ஏற்படும். இதை தவிர்ப்பதற்கு தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் தொழிற்சங்கத் தலைவர்களோடு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, போராட்டத்தை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# வங்கதேச பொதுத் தேர்தல்: ஷேக் ஹசீனா 5-வது முறையாக பிரதமர் ஆகிறார்



சென்னை, 09 ஜனவரி 2024: வங்கதேசத்தின் 12-வது பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகி வருகின்றன. முதல்கட்ட முடிவுகளின்படி, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தொடர்ந்து 5வது முறையாக வெற்றி பெற்றுள்ளார். தேர்தலில் அவரது கட்சியான அவாமி லீக் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

நேற்று அனைத்து இடங்களிலும் வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி மொத்தமுள்ள 300 இடங்களில் 200 இடங்களை கைப்பற்றியுள்ளது. கிட்டத்தட்ட 90 சதவீத முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றியை அவாமி லீக் பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஷேக் ஹசீனா கோபால்கஞ்ச்-3 தொகுதியில் தொடர்ந்து 8வது முறையாக அவர் வெற்றி பெற்றுள்ளார். 1986ல் இருந்து இத்தொகுதியில் போட்டியிட்டு வரும் அவர், இம்முறை 2,49,965 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட போட்டியாளர்களில் முக்கியமானவரான பங்களாதேஷ் சுப்ரீம் கட்சியைச் சேர்ந்த எம் நிஜாம் உதின் லஷ்கர் வெறும் 469 வாக்குகள் மட்டுமே பெற்றார். இதன்மூலம் ஷேக் ஹசீனா, அந்நாட்டின் பிரதமராக 5வது முறையாக பதவி ஏற்க இருக்கிறார். அதேபோல் தொடர்ச்சியாக நான்காவது முறையாக பதவி ஏற்கவுள்ளார். இது ஒட்டுமொத்தமாக அவரது கட்சிக்கு கிடைத்த 5வது வெற்றியாகும். வங்கதேச பொதுத்தேர்தலை பிரதான எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி புறக்கணித்துள்ளது.

ஹசீனா பதவி விலக வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை நிராகரித்ததைத் தொடர்ந்து தேர்தலை புறக்கணிப்பதாக பிஎன்பி கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் கலீதா ஜியா அறிவித்தார். தேர்தலுக்கு முன்பாக நாட்டில் பல்வேறு இடங்களில் வன்முறைகள் நிகழ்ந்தன. பல்வேறு இடங்களில் வாக்குச்சாவடிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

இந்தியா ஒரு நம்பகமான நட்பு நாடு, 1971-ம் ஆண்டு விடுதலைப் போரின்போது எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தது என்று வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நாளில் இந்தியாவுக்கு அவர் அனுப்பிய செய்தி குறித்து அவரிடம் கேட்டபோது, "நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இந்தியா எங்களின் நம்பகமான நட்பு நாடு. எங்களின் விடுதலைப் போரின் போது எங்களுக்கு ஆதரவளித்தது. 1975-க்கு பின்னர் நாங்கள் எங்கள் ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்தோம். அவர்கள் எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். இந்திய மக்களுக்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று தெரிவித்தார்.

# மகளிருக்கு அதிகாரமளிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து செயல்படுகிறது: மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்

சென்னை, 09 ஜனவரி 2024: மகளிருக்கு அதிகாரமளிக்க பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து செயல்படுகிறது என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார். சென்னை அமைந்தகரை, அண்ணாநகர் மற்றும் நொளம்பூரில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த பாரத லட்சியப் பயணம் தொடர்பான நிகழ்ச்சிகளில் இன்று (08.01.2024) கலந்து கொண்டு அவர் பேசினார்.



மோடியின் உத்தரவாத வாகனம் மக்களின் எதிர்ப்பார்ப்புகளையும் தாண்டி அரசுத் திட்டப் பலன்களை வழங்குகிறது என்று அவர் தெரிவித்தார். இந்தப் பயணம் மக்கள் பங்கேற்புடன் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாக அவர் கூறினார். 50 நாட்களில் 10 கோடிப் பேரை சென்றடைந்துள்ளது என்று கூறிய அவர், அரசு திட்டங்கள் குறித்து மக்களிடையே இந்தப் பயணம் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறினார். திட்டங்களின் பயன்கள் தகுதியான நபர்களின் வீடுகளுக்கே சென்றடைவதாக அவர் தெரிவித்தார். இந்தப் பயணம் புதிய இந்தியா மற்றும் தற்சார்பு இந்தியாவை நோக்கியது என்று அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் செயல்பாடுகள் 140 கோடி மக்களின் மனதில் நம்பிக்கையை விதைத்து அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 81 கோடி பேர் பயனடைவதாகவும், இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின் கீழ் பத்து கோடிக்கும் அதிகமானோர் பயனடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை ஏழைகள் நல உணவுத் திட்டத்தில் 3.5 கோடி பேர் பயனடைவதாகவும், இலவச எரிவாயு இணைப்புத் திட்டத்தில் இதுவரை 40 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசத்தின் வளர்ச்சிக்கு, தமிழ்நாட்டின் வளர்ச்சி முக்கியமானது என, கடந்த சில நாட்களுக்கு முன்பு, திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் பேசியதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நல்லாட்சிக்கான செங்கோல் அமிர்த காலத்தின் அடையாளமாகத் திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார். ஏழைகள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் பெண்கள் ஆகிய 4 தரப்பினரின் முன்னேற்றத்தில் அரசு அதிக கவனம் செலுத்துவதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டின் மகளிர் சக்தியை கண்டு தாம் வியப்படைவதாக அவர் குறிப்பிட்டார். மாநிலத்தில் மகளிர் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதாக அவர் தெரிவித்தார். 2014-ஆம் ஆண்டுக்கு முன்பு வங்கிக் கடன்கள் சாதாரண மக்களுக்கு எளிதில் கிடைக்கவில்லை என்று அவர் கூறினார். தற்போது, அந்த நிலை மாறியுள்ளதாகவும், சாதாரண மக்கள் எளிதில் கடன் பெற முடிவதாகவும் அவர் தெரிவித்தார். அவர்கள் உரிய முறையில் கடன்களை திருப்பிச் செலுத்துவதால் லாபத்தில் இயங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார். கடந்த ஆண்டில் அதிக வருவாய் ஈட்டிய வங்கியாக பாரத ஸ்டேட் வங்கி திகழ்கிறது என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழ்நாட்டின் நலனில் அதிக அக்கறைக் கொண்டுள்ளதாகக் கூறிய திரு பியூஷ் கோயல், மாநில மக்களுக்கு பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் போது முத்ரா வங்கிக் கடன் திட்டம், பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பயன்களை பயனாளிகளுக்கு குறிப்பாக பெண் பயனாளிகளுக்கு அதிக அளவில் அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பத்திரிகை தகவல் அலுவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் திரு எம் அண்ணாதுரை, வங்கி உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

இன்றைய நிகழ்ச்சிகளுக்கிடையே சென்னை சாலிகிராமத்தில் உள்ள தேமுதிக நிறுவனத் தலைவரும், நடிகருமான விஜயகாந்தின் இல்லத்திற்கு சென்ற திரு பியூஷ் கோயல், அங்கு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். விஜயகாந்தின் மனைவி திருமதி பிரேமலதா மற்றும் குடும்பத்தினருக்கு அவர் ஆறுதல் தெரிவித்தார்.

# பில்கிஸ் பானு வழக்கு; 11 குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்த உத்தரவு ரத்து: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

சென்னை, 09 ஜனவரி 2024: குஜராத் பில்கிஸ் பானு வழக்கில் 11 குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்த குஜராத் அரசின் உத்தரவை ரத்து செய்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது.



குஜராத் மாநிலத்தில் கடந்த 2002-ம் ஆண்டு கோத்ரா ரெயில் எரிப்பு சம்பவத்தை தொடர்ந்து வன்முறை மற்றும் மதக்கலவரம் ஏற்பட்டது. இந்த கலவரத்தின்போது 5 மாத கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ் பானுவை ஒரு கும்பல் பாலியல் பலாத்காரம் செய்தது. அவரது குடும்பத்தினர் 14 பேர் கொடூரமாக கொல்லப்பட்டனர். பில்கிஸ் பானு, ஒரு ஆண் நபர், ஒரு குழந்தை என 3 பேர் மட்டுமே உயிர் பிழைத்தனர்.

இந்த கொடூர சம்பவம் தொடர்பாக 11 பேர் குற்றவாளிகள் என 2008-ம் ஆண்டு மும்பை சி.பி.ஐ. சிறப்பு கோர்ட்டு நீதிபதி யு.டி.சல்வி தீர்ப்பளித்தார். குற்றவாளிகள் 11 பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 15 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்த குற்றவாளிகள் 11 பேரையும் கருணை அடிப்படையில் குஜராத் அரசு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 15-ந்தேதி சுதந்திர தினத்தன்று விடுதலை செய்தது.

இதனால், குற்றவாளிகள் ரதீஷம் ஷா, ஜெஷ்வந்த் சதுர்பாய் நய், கேஷ்பாய் வேதன்யா, பகபாய் வேதன்யா, ராஜ்பாய் சோனி, ரமேஷ்பாய் சவுகான், ஷைலேஷ்பாய் பட், பிபின் சந்திர ஜோஷி, கோவிந்தபாய் நய், மிதீஷ் பட், பிரதீப் மோதியா ஆகிய 11 குற்றவாளிகளும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

குஜராத் அரசு தனக்கு இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்திருந்தது. குற்றவாளிகள் முன்கூட்டியே விடுவிக்கப்பட்டதை எதிர்த்து பில்கிஸ் பானு தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. மேலும் சில பொதுநல வழக்குகளும் தொடரப்பட்டன. இந்த வழக்கின் விசாரணை கடந்த அக்டோபர் மாதம் நிறைவடைந்த நிலையில், தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், பரபரப்பாக பேசப்படும் இந்த வழக்கில் நீதிபதிகள் பி.வி.நாகரத்னா மற்றும் உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று தீர்ப்பு வழங்கியது. அப்போது பில்கிஸ் பானுவின் மனு விசாரணைக்கு உகந்ததுதான் என சுப்ரீம் கோர்ட் அமர்வு கூறியதுடன், குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்த குஜராத் அரசின் உத்தரவை ரத்து செய்தது.

இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு நிவாரணம் வழங்கவோ, முன்கூட்டியே விடுதலை செய்யவோ குஜராத் அரசுக்கு அதிகாரம் இல்லை என்றும், விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# மோடிக்கு எதிரான சர்ச்சை பேச்சு; மாலத்தீவு தூதருக்கு சம்மன்

சென்னை, 09 ஜனவரி 2024: பிரதமர் மோடிக்கு எதிரான விவகாரத்தில் மாலத்தீவு தூதர் இப்ராகிம் ஷாகீபுக்கு மத்திய வெளியுறவு அமைச்சகம் சம்மன் அனுப்பியுள்ளது.



பிரதமர் மோடி லட்சத்தீவுக்கு கடந்த 4-ந்தேதி சென்றார். இந்தியாவின் ஒரு பகுதியான லட்சத்தீவின் கவரட்டி நகரில் நடந்த விழாவில் கலந்து கொண்ட அவர், லேப்டாப்கள், இருசக்கர வாகனங்கள், விவசாய கடன் அட்டை, ஆயுஷ்மான் அடையாள அட்டை உள்ளிட்டவற்றை பயனாளிகளுக்கு வழங்கினார். மேலும் ரூ.1,200 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் மோடி, லட்சத்தீவு பயணத்தின்போது எடுத்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டார்.

அதில், இயற்கை அழகுடன் லட்சத்தீவின் அமைதி மனம் மயங்க செய்கிறது. லட்சத்தீவு மக்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள தீவின் வியக்க வைக்கும் அழகு மற்றும் மக்களின் நம்ப முடியாத அரவணைப்பை பார்த்து நான் பிரமிப்பில் இருக்கிறேன். அவர்களின் விருந்தோம்பலுக்கு நான் நன்றி கூறுகிறேன் என பதிவிட்டார்.

எனினும், இதற்கு மாலத்தீவில் அரசு அதிகாரத்தில் இருப்பவர்களிடம் இருந்து எதிர்மறையாக விமர்சனங்கள் வெளியிடப்பட்டன. ஆளும் பி.பி.எம். கட்சியின் கவுன்சில் உறுப்பினர் ஜாஹித் ரமீஸ் இந்தியர்களை கேலி செய்தும், இனவெறியை காட்டும் வகையிலும் பதிவு வெளியிட்டார்.

இதனை தொடர்ந்து, மாலத்தீவு அமைச்சர்களான மரியம் ஷியுனா, மல்ஷா ஷரீப் மற்றும் மஜ்ஜூம் மஜித் ஆகிய 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு உள்ளனர் என அந்நாட்டு அரசு தெரிவித்தது.

கடந்த நவம்பரில் மாலத்தீவில் அதிபராக பொறுப்பேற்று கொண்ட முகமது மிஜ்ஜு, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை தொடர்ந்து எடுத்து வருகிறார். அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பிருந்து, மாலத்தீவில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட இந்திய படைகளை நீக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

ஆட்சிக்கு வந்த பின்பும் அவர் தனது நிலைப்பாட்டை மாற்றி கொள்ளவில்லை. மாலத்தீவு அதிபராக பதவி ஏற்ற பின்னர், துருக்கிக்கு பயணம் மேற்கொண்ட முகமது அடுத்து, சீனாவுக்கு பயணிக்க திட்டமிட்டு உள்ளார். துருக்கி மற்றும் சீனா இரண்டும் இந்தியாவின் நலன்களுக்கு எதிராக செயல்பட கூடியவை என பார்க்கப்படும் நாடுகள் ஆகும். இந்த சூழலில், மோடி 2019-ம் ஆண்டு மாலத்தீவுக்கு பயணம் மேற்கொண்டபோது, ஏற்படுத்தப்பட்ட நீர் சார்ந்த ஆய்வு ஒப்பந்தம் ஒன்றை புதுப்பிக்க முடியாது என்று மாலத்தீவு அரசு கடந்த டிசம்பரில் தெரிவித்து விட்டது.

இதேபோன்று, கடல்வழி எல்லையை ரோந்து சென்று கண்காணிக்கும் பணிக்காக இந்தியாவால் பரிசாக அளிக்கப்பட்ட 3 விமானங்களை இயக்கும் வகையில் இந்திய வீரர்கள் குறைந்த அளவில் அந்நாட்டில் உள்ளனர்.

ஆனால், மாலத்தீவில் உள்ள 75 இந்திய ராணுவ வீரர்களை நீக்குவது என்ற தேர்தல் உறுதியை வழங்கிய மிஜ்ஜு பதவியேற்ற பின்னர், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு தலைகீழானது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# வருமானத்தை 7 மடங்காக உயர்த்திய மிசோ இயற்கை விவசாயிக்கு பிரதமர் பாராட்டு




சென்னை, 09 ஜனவரி 2024: வளர்ச்சியடைந்த பாரத லட்சியப் பயணத்தின் பயனாளிகளுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி காட்சி மூலம் கலந்துரையாடினார். மத்திய அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் உள்ளூர் அளவிலான பிரதிநிதிகளுடன் நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான தமிழ் பயனாளிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2017 ஆம் ஆண்டு முதல் இயற்கை விவசாயியான மிசோரம் மாநிலம் ஐஸ்வாலைச் சேர்ந்த சுயாயா ரால்டே, இஞ்சி, மிசோ மிளகாய் மற்றும் பிற காய்கறிகளை உற்பத்தி செய்வது குறித்து பிரதமரிடம் தெரிவித்தார், மேலும் தனது விளைபொருட்களை புது தில்லி வரை உள்ள நிறுவனங்களுக்கு விற்க முடியும் என்று குறிப்பிட்டார், இதன் மூலம் அவரது வருமானம் ரூ.20,000 முதல் ரூ.1,50,000 வரை கணிசமாக அதிகரித்துள்ளது. தனது விளைபொருட்களை சந்தையில் விற்பது குறித்து பிரதமரின் கேள்விக்கு பதிலளித்த திரு ரால்டே, வடகிழக்கு பிராந்தியத்தில் இயற்கை விவசாயப் பொருட்களின் விற்பனை சங்கிலித் தொடர் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை எந்த தொந்தரவும் இல்லாமல் விற்க ஒரு சந்தை உருவாக்கப்பட்டுள்ளது என்றார். நாட்டில் உள்ள பல விவசாயிகள் இயற்கை விவசாயத்தை நோக்கி நகர்ந்து வருவதாகவும், விவசாயிகள் திரு ரால்டே வடகிழக்கின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து வழிநடத்துவதாகவும் பிரதமர் திருப்தி தெரிவித்தார். மக்கள் மற்றும் நிலத்தின் ஆரோக்கியத்திற்கு இயற்கை விவசாயம் முக்கியமானது என்பதை திரு மோடி அடிக்கோடிட்டுக் காட்டினார். கடந்த 9 ஆண்டுகளில், ரசாயனமற்ற பொருட்களுக்கான சந்தை 7 மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளதாகவும், இது விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் நுகர்வோருக்கு சிறந்த ஆரோக்கியத்திற்கும் வழிவகுத்துள்ளது என்று பிரதமர் தெரிவித்தார். இயற்கை விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு நன்றி தெரிவித்த அவர், வரப்பில் நின்று இருப்பவர்களும் வெள்ளாமையில் இறங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# தமிழகத்திற்கு உரிய நிதியை ஒதுக்கீடு செய்திடுக! ஒன்றிய அரசுக்கு சிபிஐ (எம்) வலியுறுத்தல்!!

சென்னை, 09 ஜனவரி 2024: சிபிஎம் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில்:-

தமிழகத்தில் மிக்ஜம் புயலினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் தென்மாவட்டங்களில் வரலாறு காணாத மழைப்பொழிவினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கு மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசு இதுவரை தமிழகத்திற்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்கீடு செய்யாததை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு கடுமையான துயரங்களைச் சந்தித்த தமிழக மக்களுக்கு ஒன்றிய பாஜக அரசு செய்யும் மாபெரும் துரோகம் இது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மிக்ஜம் புயல் - வெள்ளம் மற்றும் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழை வெள்ளப் பெருக்கினால் சென்னை மற்றும் அருகாமை மாவட்ட மக்களும், தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட தென்மாவட்ட மக்களும் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்தனர். தங்களது வீடு, உடைமைகளை இழந்த மக்களும், விவசாயிகளும், மீனவர்களும், குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களும், சிறு கடை வணிகர்கள், உப்பள தொழிலாளர்கள் என அனைத்து தரப்பு மக்களும் சொல்லொணா துயரங்களைச் சந்தித்தனர். வெள்ள பாதிப்புகளை ஒன்றிய குழுவினரும், ஒன்றிய அமைச்சர்களும் நேரில் பார்வையிட்டு பாதிப்புகளை ஆய்வு செய்துள்ளனர். முதலமைச்சரும் பிறகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் பிரதமரை நேரில் சந்தித்து பாதிப்புகளை எடுத்துரைத்து ஒன்றிய அரசு உரிய நிவாரண நிதியினை வழங்கிட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். ஆனால், இவ்வளவுக்கு பின்னரும் நிவாரணப் பணிகளுக்கென இதுவரை தமிழகத்திற்கு ஒரு ரூபாய் கூட ஒன்றிய பாஜக அரசு நிதி ஒதுக்கவில்லை என்பதே உண்மையாகும். இந்நிலையில் புயல் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிதியினை தருவதற்கு பதிலாக, கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து வரிப்பணம் பெற்றதை விட அதிகமாக வழங்கப்பட்டதாக கூறி வெள்ள நிவாரணத்திற்கு நிதி ஒதுக்க முடியாது என்ற வகையில் ஒன்றிய நிதியமைச்சர் பேசியுள்ளார். இதையே பிரதமரும் வழிமொழிந்து உண்மைக்கு மாறான விபரங்களை எடுத்துக்கூறி வருகிறார். ஆனால், தமிழகத்திலிருந்து ஒன்றிய அரசுக்கு செல்லும் நேரடி வரித்தொகையில் ஒரு ரூபாய்க்கு வெறும் 29 பைசா மட்டுமே திரும்ப கிடைக்கிறது என்பதே உண்மை நிலையாகும்.

இந்தியாவில் பாஜக அல்லாத அரசுகள் ஆளும் மாநிலங்களில் குறைந்த அளவிலேயே நிதி பகிர்வுகளை அளிப்பதும், தேசிய பேரிடர் காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்யாமலும் அம்மாநில அரசுகளை கடுமையான நிதி நெருக்கடியில் சிக்க வைத்து மாநில அரசையும், நிர்வாகத்தையும் சீர்குலைக்கும் நோக்கோடு ஜனநாயக கூட்டாட்சி முறைக்கு விரோதமான நடவடிக்கைளையே ஒன்றிய பாஜக அரசு மேற்கொண்டு வருவதை நாடறியும். அந்த அடிப்படையிலேயே தமிழகத்தையும் ஒன்றிய பாஜக அரசு வஞ்சித்து வருகிறது.

எனவே, ஒன்றிய பாஜக அரசு அரசியல் உள்நோக்கத்துடனும், காழ்ப்புணர்ச்சியுடனும் செயல்படுவதை கைவிட்டு விட்டு, வரலாறு காணாத புயல் மற்றும் கனமழையினால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகளுக்கு தமிழ்நாடு அரசு கோரியுள்ள ரூபாய் 37,907 கோடியை உடனடியாக வழங்கிட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது.

# சாம்சங் இந்தியாவில் அடுத்த கேலக்ஸி ஸ்மார்ட் போனுக்கான முன்பதிவைத் வரவேற்கிறது

சென்னை, 09 ஜனவரி 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் அடுத்த முதன்மையான கேலக்ஸி ஸ்மார்ட்போனின் முன்பதிவை, இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என அறிவித்தது, முன்பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் புதிய கேலக்ஸி சாதனங்களை வாங்கும் போது முன்கூட்டியே அணுகவும் மேலும் சிறப்புச் சலுகைகளுக்குத் பெறவும் தகுதி பெறுவார்கள்.

Samsung.com, சாம்சங் பிரத்தியேக கடைகள், Amazon.in மற்றும் இந்தியா முழுவதும் உள்ள முன்னணி சில்லறை விற்பனை நிலையங்களில் 2000 ரூபாய் டோக்கன் தொகையை செலுத்தி வாடிக்கையாளர்கள் முதன்மை கேலக்ஸி சாதனங்களை பெற முன்பதிவு செய்யலாம். முன்பதிவு செய்யும் வாடிக்கையாளருக்கு ரூபாய் .5000 மதிப்புள்ள பலனைப் பெறுவார்கள்.

முதல் கேலக்ஸி ஃபிளாக்ஷிப் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, சாம்சங் வாடிக்கையாளர்களுக்கான முதன்மை அனுபவத்தை தொடர்ந்து மேம்படுத்தி, புதுமைப்படுத்தியும் வருகிறது. பல வருட கடுமையான ஆர்&டி மற்றும் முதலீட்டின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட முதன்மையான சாதனங்களை அடுத்த தலைமுறைக்கு வழங்குவதோடு, சாம்சங் கேலக்ஸி கண்டுபிடிப்புகளின் சமீபத்திய சகாப்தத்தை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் தொழில்துறையின் முன்னணியில் தனது நிலையை இது உறுதிப்படுத்துகிறது.

சாம்சங் தனது அடுத்த தலைமுறை முதன்மை சாதனங்களை ஜனவரி 17 அன்று கலிபோர்னியாவின் சான் ஜோஸில் உள்ள கேலக்ஸி அன்பேக்ட்-ல் வெளியிடவுள்ளது.

# 100 நாள் வேலை அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் வேலை வழங்கிடுக!

சென்னை, 09 ஜனவரி 2024: சிபிஎம் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில்:- நாடு முழுவதும் இருக்கிற கோடிக் கணக்கான விவசாய தொழிலாளர்கள் பெரும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர். ஒன்றிய, மாநில அரசுகள் அவ்வப்போது கிராமப்புற மக்களுக்கு வழங்கும் கடன் தள்ளுபடி, வட்டி தள்ளுபடி, வரிச்சலுகை உள்ளிட்ட எந்த சலுகைகளும் இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. வேலை வாய்ப்புகளை இழந்து நகர்ப்புறங்களுக்கும், அண்டை மாநிலங்களுக்கும் புலம் பெயர்ந்து வாழும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நெருக்கடியின் காரணமாக விவசாய தொழிலாளிகளின் தற்கொலைகள் அதிகரித்து வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், இவர்களை பாதுகாக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைக்கும் முயற்சியில் ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை சரிபாதியாக குறைத்து கிராமப்புற தொழிலாளர்களின் உரிமைகளையும், வாழ்வாதாரத்தையும் பறித்துள்ள மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோத நடவடிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) - யின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

கடந்தாண்டு ஜனவரி மாதத்தில் ஆதார் இணைப்புடன் கூடிய ஊதிய பரிவர்த்தனை செய்யும் வகையில் வேலை அட்டைகளை மாற்றிட அறிவிப்பு வெளியிட்டு அதற்கான தரவு தளத்தையும் செயல்படுத்தியது. வேலை அட்டைகள் வைத்திருக்கும் அனைத்து மக்களையும் இணைக்கும் வகையில் இதை முழுமையாக நிறைவேற்றிட போதிய உதவிகளை மேற்கொள்ளாமல் டிசம்பர் 31ந் தேதியுடன் தரவு தளத்தை கால நீட்டிப்பு செய்யாமல் மூடியுள்ளது. இதனால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தில் நாடு முழுவதும் 25.5 கோடி தொழிலாளர்கள் பதிவு செய்து வேலை அட்டை வைத்துள்ளனர். இவர்களில் 14.35 கோடி பேர் மட்டுமே தொடர்ச்சியாக வேலைக்கு செல்பவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 11 கோடி பேர் செயல்படாத வேலை அட்டை வைத்திருப்பதாக கருதப்பட்டுள்ளனர். இது தவிர ஆதார் அட்டை இல்லாத 1.80 கோடி பேருக்கு இனி வேலையில்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தமிழகத்திலும் இந்த அறிவிப்பால் சில லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, இத்திட்டத்தில் பணியாற்றும் 90 சதமான கிராமப்புற பெண்கள் மற்றும் ஏழை, எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும் நோக்கோடு செயல்படும் ஒன்றிய பாஜக அரசின் இந்நடவடிக்கை வன்மையான கண்டனத்திற்குரியதாகும்.

எனவே, ஆதார் அட்டையுடன் இணைத்து ஊதியம் வழங்கும் முறையுடன் இச்சட்டத்தை இணைத்திடும் உத்தரவை ரத்து செய்திட வேண்டுமெனவும், 100 நாள் வேலை அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் வேலை வழங்கிட வேண்டுமெனவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து விவசாய தொழிலாளர்கள் வலுமிக்க போராட்டங்களை நடத்திட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

# போக்குவரத்து தொழிலாளர்கள் வேலைநிறுத்த அறிவிப்பு! சுமூகத் தீர்வு காண சிபிஐ (எம்) வலியுறுத்தல்!!

சென்னை, 09 ஜனவரி 2024: சிபிஎம் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில்:- அரசு போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்கள் தங்களது நீண்ட கால கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி 9, 2024 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளன. ஊதியம் குறித்த பேச்சுவார்த்தையைத் துவக்குவது, ஓய்வுபெற்றோருக்கு 90 மாதங்களாக வழங்காத பஞ்சப்படி உயர்வை வழங்குவது, காலி பணியிடங்களை நிரப்புவது உள்ளிட்ட கோரிக்கைகள் பிரதான கோரிக்கைகளாக உள்ளன. இப்பிரச்சனையில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு சிவசங்கர் தொழிற்சங்கங்களுடன் 05.01.2024 அன்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மீண்டும் 07.01.2024 அன்று பேச்சுவார்த்தை நடத்துவதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் பின்னணியில் போக்குவரத்து தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை மாநில அரசு பரிசீலிக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வலியுறுத்துகிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் முதல்வரிடம் கலந்தாலோசித்து வருவதாக கூறியிருப்பது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. தொடர்ந்து 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அதிமுக, போக்குவரத்து தொழிலாளர்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளையும் ஏற்காமல் வஞ்சித்தது. கடந்த 2015 முதல் ஓய்வுபெற்ற ஊழியர்களின் பஞ்சப்படி உயர்வு தொகையை வழங்காமல் பாக்கி வைத்து இத்தொழிலாளர்களை பழிவாங்கியது.

இந்நிலையில், நீடித்து வந்த ஊதிய உயர்வு பிரச்சனையை 2021ல் ஆட்சிக்கு வந்த திமுக அரசு முடிவுக்கு கொண்டு வந்தது. அதேபோல், ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய ஒரு பகுதி பணப் பயன்களை அளித்தது பாராட்டுக்குரியதாகும். எனினும், போக்குவரத்துத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் பஞ்சப்படி உயர்வு தொகை கிடைக்காமல் அன்றாட வாழ்வுக்கே அவதிப்பட்டு வருகின்றனர். இவைகளை கணக்கில் கொண்டு தமிழக அரசு தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சுமூகத் தீர்வு காண வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.